குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உளுந்தூர்பேட்டை.

**முன்னிலை : திருமதி.வே.கோமதி, பி.ஏ., பி.எல்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, உளுந்தூர்பேட்டை.

2026–ம் ஆண்டு ஜூன் 08–ஆம் நாள், திங்கள்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.1230/2025**

**CNR.NO.TNKA10 –003937–2025**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>உளுந்தூர்பேட்டை காவல் நிலைய<br>குற்ற எண். 206/2025 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | எதிரிகள் பெயர் : 1. திரு.சிவபாலன் (வயது 22)<br>த/பெ. சிவகுமார்<br>2. திரு.விக்னேஷ் (வயது 23 )<br>த/பெ. சீத்தாராமன்<br>3. திரு.கலைச்செல்வன் (வயது 21)<br>த/பெ. வடிவழகன் |
| குற்றப்பிரிவுகள் | 1 முதல் 3 எதிரிகள் மீது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131, 351(3) |
| வனையப்பட்டது | 1 முதல் 3 எதிரிகள் மீது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131, 351(3) |
| தண்டிக்கப்பட்டது | இறுதியாக, 1 முதல் 3 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131, 351(3)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 1 முதல் 3 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131, 351(3)–ன் கீழ் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 271(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| தீர்மானம் | எதிரிகள் குற்றவாளி இல்லை |
| குற்றம்சாட்டப்பட்டவர் விபரம் | |

| வ. எண் | பெயர் | த.பெ/க.பெ | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1. | சிவபாலன் | சிவகுமார் | இந்து | கூலி | தெற்கு தெரு, அன்னகாரகுப்பம் கிராமம், பன்ருட்டி. | 22 |
| 2. | விக்னேஷ் | சீத்தாராமன் | இந்து | கூலி | வடக்கு தெரு, அன்னகாரகுப்பம் கிராமம், பன்ருட்டி. | 23 |
| 3. | கலைச்செல்வன் | வடிவழகன் | இந்து | கூலி | அன்னகாரகுப்பம் கிராமம், பன்ருட்டி. | 21 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 04.04.2025 |
| புகார் | : | 04.04.2025 |
| கைது தேதி | : | A1, A2– 04.04.2025 |
| பிணை விடுவிப்பு | : | A1, A2– This court Bail order in C.M.P.No.344/2025 on 05.04.2025<br><br>A3 – The Hon'ble Principal District and sessions Judge, Kallakurichi, anticipatory Bail order in Crl.M.P.No. 937/2025 on 08.04.2025 |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 26.05.2026 |
| வழக்கு விசாரணை முடிவு | : | 08.06.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | A1 – 04.04.2025 – 07.04.2025 |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 15.09.2025 |
| Date of Questioning | : | 26.05.2026 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | Compromise petition Mp.No. 1/2026 is dismissed on 01.06.2026<br>311 Cr.P.C petition Mp.No. 2/2026 is allowed on 03.06.2026 |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief<br>1.01.06.2026<br>2.01.06.2026<br>3.01.06.2026<br>4.01.06.2026<br>5.03.06.2026 | Cross<br>01.06.2026<br>01.06.2026<br>01.06.2026<br>01.06.2026<br>03.06.2026 |
| பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 351 (1)(b) – விசாரணை தேதி | : | 08.06.2026 | |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil | |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil | |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil | |

இவ்வழக்கானது 15.09.2025 –ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 08.06.2026 –ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் உதவி வழக்குரைஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஆனந்த்., M.A.,LLB., MSW., அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது புகார்தாரரால் பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டப்பிரிவு 193–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

**2. குற்ற முறையீட்டின் சுருக்கம்:–**

இவ்வழக்கின் வாதியும் சாட்சி–1 ம் ஆன மணிகண்டன், த/பெ உத்திரகுமார், என்பவர் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம் பாலி கிராமம், நடுத்தெருவில் தன் குடும்பத்துடன் வசித்தும்

உளுந்தூர்பேட்டை திருச்சி ரோட்டில் இயங்கிவரும் எழில்பாபு ஏஜென்சிஸ் என்ற HP பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருபவர் ஆவார். இவ்வழக்கின் சாட்சி–1 ஆன மணிகண்டன் 04.04.2025 ந் தேதி அதிகாலை 02.50 மணியளவில் பெட்ரோல் பங்க் அலுவலகத்தில் பணியில் இருந்தும் அவருடன் பணியில் இருந்த சாட்சி–1 ஹரிகரன் என்பவரும் பணியை முடித்து உறங்கி கொண்டிருந்த போது மேற்படி பெட்ரோல் பங்கிற்கு இருசக்கர வாகனத்தில் வந்த இவ்வழக்கின் எதிரிகளான 1) சிவபாலன் த/பெ சிவக்குமார் தெற்கு தெரு, அன்னகாரக்குப்பம் கிராமம் 2) விக்னேஷ் த/பெ சீத்தாராமன், வடக்கு தெரு, அன்னகாரக்குப்பம் கிராமம் 3) கலைச்செல்வன் த/பெ வடிவேல் அன்னகாரகுப்பம் கிராமம் அனைவரும் பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய மூன்று பேரும் பெட்ரோல் கேட்டு கொண்டதன் பேரில் சாட்சி–1 எழுந்து வந்து 200/– ரூபாய்க்கு பெட்ரோல் போட்டு அதற்குண்டான பணத்தை எதிரிகளிடம் கேட்ட போது எதிரியானவர்கள் தங்களது செல்போன் மூலம் பணம் அனுப்புவதாக சொல்லி அனுப்பாமல் இருந்தவர்களிடம் சாட்சி–1 ஆனவர் அப்படியானால் உங்கள் செல்போனை கொடுத்து விட்டு காலையில் பணம் கொடுத்து வாங்கி செல்லுங்கள் என்று சொன்னதற்கு மேற்படி எதிரிகள் மூன்று பேரும் சாட்சி–1 ஐ பார்த்து ஏய் ஒத்தா தேவிடியா பையா எங்களோட செல்போனையே கேக்கிறியா என்று கையால் கன்னத்திலும் முதுகிலும் அடித்தும் பின்னர் எதிரிகள் மூவரும் கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து வந்து சாட்சி–1 ன் முதுகிலும் உடம்பிலும் அடித்தும் சம்பவத்தை சாட்சி–2 ஹரிகரன் என்பவர் மறித்துவிடும்போது எதிரிகள் மூவரும் கையில் வைத்திருந்த கருங்கல்லை காட்டி எங்களிடம் வைத்துக்கொண்டால் அடித்து கொலை செய்துவிடுவோம் என்று குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளார். எனவே மூன்று எதிரிகளின் செய்கையானது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131, 351(3) – ன் படி தண்டிக்கபடவேண்டிய குற்றம் என உளுந்தூர்பேட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகள் முன்னிலையானவுடன் எதிரிகளுக்கு வழக்காவணங்களின் நகல் பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 230–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகளுக்கு எதிராக பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 263(1) –ன் கீழ் 1 முதல் 3 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131, 351(3)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு

சட்டப்பிரிவு 263(2) –ன் கீழ் அவர்களிடம் விளக்கி வினவிய போது எதிரிகள் பொய்வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. விசாரணை:–**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணம் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் :**

(1) அ.சா.1 திரு.மணிகண்டன் தனது சாட்சியத்தில் "நான் பாலி கிராமத்தில் வசித்து பெட்ரோல் பங்க் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 04.04.2025 அன்று இரவு நான் பெட்ரோல் பங்கில் சேல்ஸ் மேனாக இருந்தேன். பெட்ரோலை நான் சிவபாலன் பைக்கிற்கு போட்டுவிட்டு, தொகை கேட்டேன். போனில் ஸ்கேன் ஆகவில்லை. அதனால் நான் தொகை கேட்டு மற்றும் செல்போன் கேட்டேன்.நான் அவரிடம் செல்போனை கொடுங்கள் பின்னர் தொகையை கொடுங்கள் என சொன்னேன். அதனால் சிறு பிரச்சனை ஏற்பட்டது. கோபத்தில் அவர்கள் மீது புகார் கொடுத்தேன். தற்சமயம் நான் சமாதானம் ஆகிவிட்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகும் . அதில் உள்ள என்ன வாசகம் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(2) அ.சா.2 திரு.பரத்ராஜ் தனது சாட்சியத்தில், "நான் உளுந்தூர்பேட்டையில் வசித்து பெட்ரோல் பங்க் வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 யை தெரியும். எதிரிகளை தெரியும். சுமார் 1 வருடங்களுக்கு முன்பாக இரவு நேரத்தில் அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் அடிதடி தகராறு நடந்தது. பணம் சம்மந்தமாக இருவருக்கும் சண்டை நடந்தது. யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(3) அ.சா.3 திரு.அய்யப்பன் தனது சாட்சியத்தில், " நான் ஒலையனூரில் வசித்து நகைகடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன்

லட்சுமணன் என்பவர் கையொப்பம் செய்தார். சுமார் 4-1/2 வருடங்களுக்கு முன்பாக காவல் நிலையத்திற்கு சென்றபோது போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். அந்த பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(4) அ.சா.4 திரு.லட்சுமணன் தனது சாட்சியத்தில், "நான் பாலியில் வசித்து பெட்ரோல் பங்க் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்று தெரியாது. சுமார் 1 வருடங்களுக்கு முன்பாக காவல் நிலையத்திற்கு சென்றபோது போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். அந்த பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5) அ.சா.5 காவல் சிறப்பு உதவிஆய்வாளர் திரு. ஜாபர் தனது சாட்சியத்தில், "நான் தற்போது உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் திரு.அன்பழகன் என்பவருடன் நான் பணிபுரிந்த வகையில் அவரது கையெழுத்தும் கையொப்பம் எனக்கு தெரியும் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் திரு.அன்பழகன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது 1 04.04.2025 ம் தேதி 08.30 மணிக்கு மணிகண்டன் த/பெ உத்திரகுமார் என்பவர் கொடுத்த புகாரை பெற்றார். அந்த புகார் அ.சா.ஆ.4 ஆகும். நிலைய குற்ற எண். 206/2025 BNS .பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) ன் படி முதல் தகவல்அறிக்கை தயார் செய்தார். அவர் தயார் செய்த முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் அவர் சம்பவம் இடம் சென்று லட்சுமணன், அய்யப்பன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார். அவர் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆகும். மாதிரிவரைபடம் அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் எதிரி குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதை கண்டு எதிரிகளை தேடி சென்றதில் 04.04.2025 அன்று 11.30 மணிக்கு உளுந்தூர்பேட்டை டோல்கேட் அருகில் நின்றிருந்த அவர்களை காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனை செய்து வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் சம்பவ சாட்சிகளான மணிகண்டன், அரிகரன், பரத்ராஜா

ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்தும், பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்தும் வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் சாட்சிகளை விசாரித்ததில் இவ்வழக்கின் சட்டப்பிரிவான BNS .பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) என இருந்ததை ஒரு பிரிவு மாற்றம் செய்து BNS .பிரிவுகள் 296(b), 115(2). 351(3). 131 ன் படி ஒரு பிரிவு மாற்றல் அறிக்கை தாக்கல் செய்தார். அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ. 8 ஆகும். பின்னர் எதிரிகள் மீது BNS .பிரிவுகள் 296(b), 115(2), 351(3), 131 ன் படி புலன்விசாரணை மேற்கொண்டு இறுதிஅறிக்கை தாக்கல் செய்தார்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 351 –ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 351 (1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க, எதிரிகள் அதை பொய்சாட்சி என மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**6(a) அரசு தரப்பில் வாதம் :**

அரசு தரப்பில் 1 முதல் 3 எதிரிகள் மீதான பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131, 351(3)–ன் கீழான குற்றச்சாட்டும் போதுமான சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகள் குற்றவாளிகள் எனவே, தண்டிக்கப்பட வேண்டும் என வாதம் செய்யப்பட்டது.

**6(b) எதிரிகள் தரப்பில் வாதம்:**

எதிரிகள் தரப்பில், எதிரிகளும், புகார்தாரும் நண்பர்கள் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் அறிவுரையை ஏற்றுக்கொண்டு சமாதானமாக ஆகிவிட்டனர் என சமாதான மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றும், சாட்சிகளில் எவரும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை நிரூபிக்கும் வகையிலும் சாட்சியம் அளிக்கவில்லை, எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என வாதம் செய்யப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது 1 முதல் 3 எதிரிகள் மீதான பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131, 351(3)–ன் கீழான குற்றச்சாட்டும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி

நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**8. தீர்வு :-**

**(8.1)** இவ்வழக்கின் வாதியும் சாட்சி-1 ம் ஆன மணிகண்டன்,த/பெ உத்திரகுமார், என்பவர் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம் பாலி கிராமம், நடுத்தெருவில் தன் குடும்பத்துடன் வசித்தும் உளுந்தூர்பேட்டை திருச்சி ரோட்டில் இயங்கிவரும் எழில்பாபு ஏஜென்சிஸ் என்ற HP பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருபவர் ஆவார். இவ்வழக்கின் சாட்சி-1 ஆன மணிகண்டன் 04.04.2025 ந் தேதி அதிகாலை 02.50 மணியளவில் பெட்ரோல் பங்க் அலுவலகத்தில் பணியில் இருந்தும் அவருடன் பணியில் இருந்த சாட்சி-1 ஹரிகரன் என்பவரும் பணியை முடித்து உறங்கி கொண்டிருந்த போது மேற்படி பெட்ரோல் பங்கிற்கு இருசக்கர வாகனத்தில் வந்த இவ்வழக்கின் எதிரிகளான 1) சிவபாலன் த/பெ சிவக்குமார் தெற்கு தெரு, அன்னகாரக்குப்பம் கிராமம் 2) விக்னேஷ் த/பெ சீத்தாராமன், வடக்கு தெரு, அன்னகாரக்குப்பம் கிராமம் 3) கலைச்செல்வன் த/பெ வடிவேல் அன்னகாரகுப்பம் கிராமம் அனைவரும் பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய மூன்று பேரும் பெட்ரோல் கேட்டு கொண்டதன் பேரில் சாட்சி-1 எழுந்து வந்து 200/- ரூபாய்க்கு பெட்ரோல் போட்டு அதற்குண்டான பணத்தை எதிரிகளிடம் கேட்ட போது எதிரியானவர்கள் தங்களது செல்போன் மூலம் பணம் அனுப்புவதாக சொல்லி அனுப்பாமல் இருந்தவர்களிடம் சாட்சி-1 ஆனவர் அப்படியானால் உங்கள் செல்போனை கொடுத்து விட்டு காலையில் பணம் கொடுத்து வாங்கி செல்லுங்கள் என்று சொன்னதற்கு மேற்படி எதிரிகள் மூன்று பேரும் சாட்சி-1 ஐ பார்த்து ஏய் ஒத்தா தேவிடியா பையா எங்களோட செல்போனையே கேக்கிறியா என்று கையால் கன்னத்திலும் முதுகிலும் அடித்தும் பின்னர் எதிரிகள் மூவரும் கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து வந்து சாட்சி-1 ன் முதுகிலும் உடம்பிலும் அடித்தும் சம்பவத்தை சாட்சி-2 ஹரிகரன் என்பவர் மறித்துவிடும்போது எதிரிகள் மூவரும் கையில் வைத்திருந்த கருங்கல்லை காட்டி எங்களிடம் வைத்துக்கொண்டால் அடித்து கொலை செய்துவிடுவோம் என்று குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளார். எனவே மூன்று எதிரிகளின் செய்கையானது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131, 351(3) - ன் படி தண்டிக்கபடவேண்டிய குற்றம் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

(8.2) அ.சா.ஆ.4 புகாரிலும், அ.சா.1 திரு.மணிகண்டன் போலிசார் வாக்குமூலத்திலும், "04.04.2025 ந்தேதி அதிகாலை 02.50 மணியளவில் பெட்ரோல் பங்கில் வாகனம் ஏதும் வராத காரணத்தினால் நாங்கள்

இருவரும் அலுவலகத்தில் உறங்கி கொண்டிருந்தோம். அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்கள் பெட்ரோல் போடுமாறு அழைத்தார்கள். நானும் எழுந்து வந்து 200/- ரூபாய்க்கு பெட்ரோல் போட்டேன். அந்த பணத்தை செல்போன் மூலம் அனுப்புவதாக சொன்னார்கள். ஆனால் அரை மணி நேரத்திற்கும் மேலாக பணத்தை அனுப்பாமல் இருந்ததால் நான் பணத்தை அனுப்புமாறு கேட்டேன். அவர்கள் கையில் பணம் இல்லை என்று சொன்னார்கள். அதனால் உங்களது சொல்போனை கொடுத்துவிட்டு போங்கள் காலையில பணத்தை கொடுத்துட்டு வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னேன் அதற்கு அவர்கள் மூன்று பேரும் ஏய் ஒத்தா தேவிடியா பையா எங்களோட செல்போனையே கேக்கிறியா என்று கையால் கன்னத்திலும் முதுகிலும் அடித்தார்கள். பின்னர் அவர்கள் மூவரும் கீழே கிடந்த கருங்கல்லை எடுத்துவந்து எனது முதுகிலும் உடம்பிலும் அடித்தார்கள் நான் அடி தாங்க முடியாமல் கத்தவே என்னுடன் பணியில் இருந்த ஹரிகரன் வந்து மறித்துவிடும்போது அவர்கள் மூவரும் கையில் வைத்திருந்த கருங்கல்லை காட்டி எங்களிடம் வைத்துக்கொண்டால் அடித்து கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டிவிட்டு சென்றனர்"என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் அ.சா.1 அரசு தரப்பு முதல்விசாரணையில், " கடந்த 04.04.2025 அன்று இரவு நான் பெட்ரோல் பங்கில் சேல்ஸ் மேனாக இருந்தேன். பெட்ரோலை நான் சிவபாலன் பைக்கிற்கு போட்டுவிட்டு, தொகை கேட்டேன். போனில் ஸ்கேன் ஆகவில்லை. அதனால் நான் தொகை கேட்டு மற்றும் செல்போன் கேட்டேன். நான் அவரிடம் செல்போனை கொடுங்கள் பின்னர் தொகையை கொடுங்கள் என சொன்னேன். அதனால் சிறு பிரச்சனை ஏற்பட்டது. கோபத்தில் அவர்கள் மீது புகார் கொடுத்தேன். தற்சமயம் நான் சமாதானம் ஆகிவிட்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள என்ன வாசகம் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று, புகார் மற்றும் போலிசார் விசாரணை வாக்குமூல சங்கதிகளுக்கு முரண்பட்டு பிறழ்சாட்சியமளித்து அ.சா.ஆ.4 புகார் சங்கதிகளையும்,எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு வழக்கையும் உறுதிப்படுத்தி சாட்சியமளிக்கவில்லை.

(8.3) கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2 திரு.பரத்ராஜ் போலிசார் விசாரணையில், "04.04.2025 ந்தேதி அதிகாலை 02.50 மணியளவில் பெட்ரோல் பங்கில் வாகனம் ஏதும் வராத காரணத்தினால் மணிகண்டனும் ஹரிகரனும் அலுவலகத்தில் உறங்கி கொண்டிருந்ததாகவும் இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்கள் பெட்ரோல் போடுமாறு அழைத்ததால்

மணிகண்டன் எழுந்து வந்து 200/-ரூபாய்க்கு பெட்ரோல் போட்டதாகவும் அந்த பணத்தை செல்போன் மூலம் அனுப்புவதாக சொன்னதற்கு அவர்கள் அரை மணி நேரத்திற்கும் மேலாக பணத்தை அனுப்பாமல் இருந்ததால் மணிகண்டன் அவர்களிடம் பணத்தை அனுப்புமாறு கேட்ட போது அவர்கள் கையில் பணம் இல்லை என்று சொன்னதாகவும் அதனால் மணிகண்டன் அவர்களிடம் உங்களது சொல்போனை கொடுத்துவிட்டு போங்கள் காலையில பணத்தை கொடுத்துட்டு வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னபோது அதற்கு அவர்கள் மூன்று பேரும் மணிகண்டனை பார்த்து ஏய் ஒத்தா தேவிடியா பையா எங்களோட செல்போனையே கேக்கிறியா என்று கையால் கன்னத்திலும் முதுகிலும் அடித்தார்கள் என்றும் பின்னர் அவர்கள் மூவரும் கீழே கிடந்த கருங்கல்லை எடுத்துவந்து மணிகண்டன் முதுகிலும் உடம்பிலும் அடித்தார்கள் என்றும் அடி தாங்க முடியாமல் கத்தவே மணிகண்டனுடன் பணியில் இருந்த ஹரிகரன் வந்து மறித்துவிடும்போது அவர்கள் மூவரும் கையில் வைத்திருந்த கருங்கல்லை காட்டி எங்களிடம் வைத்துக்கொண்டால் அடித்து கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டிவிட்டு சென்றனர் என்று சம்பவத்தை நான் காலையில் டுட்டிக்கு வந்த போது மணிகண்டன் சொல்லி தெரிந்து கொண்டேன்" என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் அ.சா.2, அரசு தரப்பு முதல் விசாரணையில், "அ.சா.1 யை தெரியும். எதிரிகளை தெரியும். சுமார் 1 வருடங்களுக்கு முன்பாக இரவு நேரத்தில் அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் அடிதடி தகராறு நடந்தது. பணம் சம்மந்தமாக இருவருக்கும் சண்டை நடந்தது. யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

(8.4) பார்வை மகசர் சாட்சி அ.சா.3 திரு.அய்யப்பன் அரசு தரப்பு முதல் விசாரணையில், " அ.சா.1 யை தெரியும். எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் லட்சுமணன் என்பவர் கையொப்பம் செய்தார். சுமார் 4-1/2 வருடங்களுக்கு முன்பாக காவல் நிலையத்திற்கு சென்றபோது போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை" என்று சாட்சியம் அளித்து அ.சா.ஆ.6 பார்வை மகசர் சங்கதிகளை உறுதிப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை.

(8.5) பார்வை மகசர் சாட்சி அ.சா.4 திரு. லட்சுமணன் அரசு தரப்பு முதல் விசாரணையில், " அ.சா.1 யை தெரியும். எதிரிகளை தெரியாது. என்னிடம்

காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்று தெரியாது. சுமார் 1 வருடங்களுக்கு முன்பாக காவல் நிலையத்திற்கு சென்றபோது போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன்.போலீசார் என்னை விசாரிக்கவில்லை" என்று சாட்சியம் அளித்து அ.சா.ஆ.6 பார்வை மகசர் சங்கதிகளை உறுதிப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை.

(8.6) அ.சா.5 திரு. ஜாபர் காவல் சிறப்பு உதவி ஆய்வாளரான புலன் விசாரணை அதிகாரி, ஆவணக் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.எதிரிகள் தரப்பில் சமாதான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து MP.No. 1/2026, 01.06.2026 – ம் தேதி அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(8.7) அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து அ.சா.1 முதல் அ.சா.4 வரை உள்ள சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பாடாக பிறழ்சாட்சியம் அளித்து வழக்கு சம்பவத்தையும் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டையும் உறுதிப்படுத்தி சாட்சியம் அளிக்காததும், சான்றுப்பொருட்கள் கைப்பற்றப்படாததும், அ.சா. 5 ஆவணக்கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளதும், 04.04.2025–ந் தேதி எதிரிகள் மூவரும், அ.சா.1–ஐ அசிங்கமாக திட்டியும்,கையால் கண்ணத்திலும், முதுகிலும் அடித்தும், கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து அடித்தும், கருங்கல்லை காட்டி கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று அரசு தரப்பு சாட்சிகள் யாரும் வழக்கு சம்பவத்தையும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டையும் உறுதிப்படுத்தி சாட்சியம் அளிக்காததும், 1 முதல் 3 எதிரிகள் மீதான பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131, 351(3)–ன் கீழான குற்றச்சாட்டும் அரசு தரப்பில் போதுமான சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்படவில்லை. ஆக, 1 முதல் 3 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131, 351(3)–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, 1 முதல் 3 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131, 351(3)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 1 முதல் 3 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 296(b), 115(2), 131,**

**351(3)–ன் கீழ் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 271(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. வழக்கு சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 08 –ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

V GOMATHI
Digitally signed by V GOMATHI
Date: 2026.06.08 01:07:50 +0600

நீதித்துறை நடுவர் எண்.1,
உளுந்தூர்பேட்டை

**இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா. 1 | திரு.மணிகண்டன் த/பெ உத்திரகுமார் |
| அ.சா. 2 | திரு. பரத்ராஜ் த/பெ பாபுராஜ் |
| அ.சா. 3 | திரு.அய்யப்பன் த/பெ சிவகுமார் |
| அ.சா. 4 | திரு.லட்சுமணன் த/பெ முனியன் |
| அ.சா.5 | திரு. ஜாபர் த/பெ அப்துல் ஜப்பார் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ. 1 | 04.04.2025 | புகாரில் உள்ள அ.சா.1–ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 2 | 04.04.2025 | பார்வைமகசரில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 3 | 04.04.2025 | பார்வைமகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 4 | 04.04.2025 | புகார் |
| அ.சா.ஆ. 5 | 04.04.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ. 6 | 04.04.2025 | பார்வை மகசர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ. 7 | 04.04.2025 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ. 8 | 30.04.2025 | சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்</u>**: இல்லை

**<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள்</u>** : இல்லை

**<u>எதிரிகள் தரப்பில் சான்றாவணம்</u>** : இல்லை

V GOMATHI Digitally signed by V GOMATHI Date: 2026.06.08 01:08:03 +0600

நீதித்துறை நடுவர் எண்.1,
உளுந்தூர்பேட்டை

**<u>நகல்கள்</u>**

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள், கள்ளக்குறிச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2. அரசு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் உளுந்தூர்பேட்டை

3.காவல் உதவி ஆய்வாளர், உளுந்தூர்பேட்டை காவல் நிலையம், உளுந்தூர்பேட்டை.

**<u>குறிப்பு</u>**

அரசு தரப்பு சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.